# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயற்குழுவின் சிறப்புக் கூட்டக்குறிப்பு

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயற்குழுவின் சிறப்புக் கூட்டம் 06-09-2019 அன்று சென்னைப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள தமிழ் வளர்ச்சிக்கழக அறையில் காலை 10.30 மணிக்குக் கூடியது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர்.

**தலைவர்**

டாக்டர். பொன்னவைக்கோ, தலைவர் IATR

1. பேரா. டாக்டர். இ. சுந்தரமூர்த்தி, துணைத் தலைவர்
2. அரசர் அருளாளர், சிக்காக்கோ கிளைச் செயலாளர்
3. பேரா. டாக்டர் மருதநாயகம், ஒருங்கிணைப்பாளர்
4. டாக்டர் உலகநாயகி பழனி, IATR பெதுச்செயலாளர்

இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு.

1. அமெரிக்காவில் பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது கலந்து கொள்வதற்கு வாய்ப்பில்லாதவர்களை நேரில் அழைத்துச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
2. பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டக்குறிப்பை செய்தித்தாள்களுக்கு அறிக்கையாக அனுப்ப முடிவு செய்யப்பட்டது.
3. தொல்காப்பியம் செம்பதிப்பினைப் பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வெளியிட்டபோது ஆசிரியராக இருந்து உதவிய டாக்டர். மருதநாயகம் அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.
4. வரவு செலவு கணக்கு விவரம் கலந்துரையாடப்பட்டது.
5. நிறைவாக, 11ஆவது உலகத் தமிழ் மாநாட்டை பற்றிய முறையான பத்திரிகையாளர் சந்திப்பினைக் கூடிய விரைவில் கூட்ட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.
6. ஆய்வியல் அறிஞர்களை அழைத்து நற்சான்றிதழ் வழங்கும் விழாவினை 12-09-2019 அன்று காலை 10.30 மணியளவில் தமிழ் வளர்ச்சிக்கழக அறையில் நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.
7. செயலர் நன்றி கூற, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.